புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அகரம்சேரி, மாத்தூர் - 635 804
ACADEMIC INNOVATION AND
ENTREPRENEURSHIP
DEVELOPMENT PROGRAMME
(AIEDP)
24-09-2019
EDII-TN
Entrepreneurship

DEVELOPMENT PROGRAMME
(AIEDP)
Entrepreneurship
24-09-2019
START UP
" STUDENT
ORGANIZED BY :

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர்.
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
அகரம்சேரி, மாதனூர் - 635 804.
ACADEMIC INNOVATION AND
ENTREPRENEURSHIP
DEVELOPMENT PROGRAMME
(AIEDP)
24-09-2019
START UP
ONE DAY

- 635 804.
ACADEMIC INNOVATION AND
ENTREPRENEURSHIP
PROGRAMME
(AIEDP)
24-09-2019
START UP
ONE DAY

இன்றைய பஞ்சாங்கம் 'ஜோதிட ரத்னா'

அணைக்கட்டு மெயின் பஜார் அருகில்

கட்டி முடித்து பயன்பாட்டுக்கு வராத பொது சுகாதார வளாகம்

▶ எம்எல்ஏ தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் கட்டி முடிக்கப்பட்டு 6 மாதங்களை கடந்தும் பயன்பாட்டுக்கு வராத அணைக்கட்டு மெயின் பஜாரில் உள்ள கட்டண பொது சுகாதார வளாகம்.

பொதுமக்கள் கடும் அவதி

வேலூர், செப்.26: அணைக்கட்டு மெயின் பஜார் பகுதியில் பொதுமக்களின் நலன் கருதி கட்டண பொது சுகாதார வளாகம் கட்டி முடிக்கப்பட்டு 6 மாதங்கள் கடந்தும் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படவில்லை என்று வேதனை தெரிவித்துள்ளனர்.

அணைக்கட்டு வேலூர் மாவட்டத்தின் தலைநகரான வேலூருக்கும் அணைக்கட்டுக்கு வருவதுடன், மாவட்ட தலைநகரான வேலூருக்கும் அணைக்கட்டு வழியாகவே செல்ல வேண்டும். அதேபோல் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமை அன்று நடைபெறும் வாரச் சந்தைக்கும் பெருமளவு மக்கள் வந்து செல்கின்றனர்.

இந்நிலையில் அணைக்கட்டு மெயின் பஜார் பகுதியில் கட்டண அடிப்படையில் பொது சுகாதார வளாகம் கட்டப்பட்டு கட்டி 6 மாதங்களுக்கு முன்பு எம்எல்ஏ நந்தகுமாரால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் என்ன காரணத்தாலோ இக்கட்டிடத்தை திறந்து வைக்க அணைக்கட்டு ஒன்றிய ஆணையர் இந்தியில் அணைக்கட்டு மெயின் பஜார் பகுதியில் கட்டண அடிப்படையில் பொது சுகாதார வளாகம் கட்டப்பட்டு கட்டி 6 மாதங்களுக்கு முன்பு எம்எல்ஏ நந்தகுமாரால் திறந்து வைக்கப்பட்டது.

ஆனால் என்ன காரணத்தாலோ இக்கட்டிடத்தை திறந்து வைக்க அணைக்கட்டு ஒன்றிய

பேரணாம்பட்டு பஸ் நிலையத்தில்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில்

கணினி இயக்குனர் பதவிக்கான தேர்வு நடவடிக்கைகள் ரத்து

வேலூர், செப்.26: தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் காலியாக உள்ள கணினி இயக்குனர் பதவிக்கான தேர்வு நடவடிக்கைகளை ரத்து செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் காலியாக உள்ள 111 கணினி இயக்குனர் பணியிடங்களை நிரப்ப கடந்த 15.10.2018ம் தேதி இணையதளம் மற்றும் நாளிதழ்களில் அறிவிப்புகள் வெளியிடப்பட்டு விண்ணப்பங்கள் பெறப்பட்டன. இதற்கான எழுத்து தேர்வு கடந்த 8.9.2019 அன்று சென்னை, மதுரை, கோவை மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் நடந்தது.

தற்போது மேற்காணும் எழுத்துத்தேர்வு, தேர்வு முடிவுகள் மற்றும் அதுதொடர்பான நடவடிக்கைகள் அனைத்தும் நிர்வாக காரணங்களுக்காக ரத்து செய்யப்படுவதாகவும், வேறொரு எழுத்துத்தேர்வு நடத்தும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்றும் வேலூர் தொழிலாளர் உதவி ஆணையர்-1 சமூக பாதுகாப்புத்திட்டம் அறிவித்துள்ளார்.

கிணற்றில் தவறி விழுந்த பசு மீட்பு

ராணிப்பேட்டை, செப். 26: ராணிப்பேட்டை அடுத்த வாலாபேட்டையை சேர்ந்தவர் ராணி(50). இவர் தனக்கு சொந்தமான 2 பசுக்களை நேற்று முன்தினம் தங்களது விவசாய நிலத்தில் மேய்த்து கொண்டிருந்தார். அப்போது, பசுக்களுக்கு இடையே சண்டை ஏற்பட்டது. இதில் ஒரு பசு அங்குள்ள சுமார் 50 அடி ஆழ கிணற்றில் தவறி விழுந்தது.

இதனால் அதிர்ச்சியடைந்த ராணி, சிப்காட் தீயணைப்பு துறையினருக்கு தகவல் கொடுத்தார். அதன்பேரில், நிலைய அலுவலர் கோபால்சிங் மற்றும் தீயணைப்பு வீரர்கள் விரைந்து வந்து 2 மணி நேரம் போராடி பசுவை உயிருடன் மீட்டு ஒப்படைத்தனர்.

அகரம்சேரி அரசு கலை கல்லூரியில்

மாணவர்களுக்கான தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம்

▶ பள்ளிகொண்டா அடுத்த அகரம்சேரியில் உள்ள அரசு கலை கல்லூரியில் தொழில் முனைவோர் ஆவதற்கான விழிப்புணர்வு முகாம் நடந்தது.

பள்ளிகொண்டா, செப்.26: பள்ளிகொண்டா அடுத்த அகரம்சேரியில் உள்ள அரசு கலை கல்லூரியில் தொழில் முனைவோர் ஆவதற்கான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.

பள்ளிகொண்டா அடுத்த அகரம்சேரி கிராமத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி இயங்கி வருகிறது. இக்கல்லூரியில் இறுதியாண்டு மாணவ, மாணவிகளுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் சிறப்பு விழிப்புணர்வு முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் உமாமகேஷ்வரி வரவேற்றார்.

முகாமில், மாணவ, மாணவிகள் தொழில் முனைவோர் ஆவதற்கான வழிகள், புதுதாக எண்ணங்கள், ஊக்குவிக்கும் விதமாக பேராசிரியர்கள் பேசினார்கள். இதில் பல்வேறு துறை பேராசிரியர்கள், இறுதியாண்டில் பயிலும் 100க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்

பட்டாசுகள் விற்பனை செய்யும் அனுமதிக்கு